பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

01 10 2024 6 30
செவ்வாய்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. விவசாயிகளின் அனைத்து பிரச்சினைகளுக்கும் விரைந்து தீர்வுகாண வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் இருப்பதாக வேளாண் அமைச்சர் திரு சிவராஜ்சிங் செளஹான் தெரிவித்துள்ளார்.
2. பாதுகாப்புத்துறையில் விரைந்து தற்சார்பை எட்டுவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் கூறியுள்ளார்.
3. முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை மாநில அரசு தொடர்ந்து எடுத்து வருவதாக நீர்வளத்துறை அமைச்சர் திரு துரைமுருகன் தெரிவித்துள்ளார்.
4. தமிழகத்திற்கான புதிய தேசிய நெடுஞ்சாலை திட்டங்களை நிறைவேற்றித் தருமாறு மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு ஏ வ வேலு மத்திய அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.
5. பங்களாதேஷ்க்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா ஏழு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

<u>*----- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

விவசாயிகளின் அனைத்து பிரச்சினைகளுக்கும் விரைந்து தீர்வுகாண வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் இருப்பதாக வேளாண் அமைச்சர் திரு சிவராஜ்சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று விவசாயிகள் சங்க பிரதிநிதிகள் கூட்டத்தில் கலந்து கொண்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பயிர் சாகுபடிக்குத் தேவையான உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள், தரமான விதைகள் ஆகியவற்றை தங்கு தடையின்றி வழங்க அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகக் கூறினார்.

**[]<<<>>>[]**

பாதுகாப்புத்துறையில் விரைந்து தற்சார்பை எட்டுவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்,

புதுதில்லியில் இன்று பாதுகாப்பு கணக்குத்துறையின் ஆண்டு விழாவில் உரையாற்றிய அவர், பாதுகாப்புத்துறை உற்பத்தியில் புதிய தொழில்நுட்பங்கள் கொண்டுவரப்பட்டுள்ளதாகக் கூறினார்.

பாதுகாப்பு கணக்குத்துறையில் இலக்குகளை எட்டுவதற்கு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் திரு ராஜ்நாத்சிங் தெரிவித்தார்.

[]<<<>>>[]

முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மாநில அரசு தொடர்ந்து எடுத்து வருவதாக நீர்வளத்துறை அமைச்சர் திரு துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், உச்சநீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் கேரள அரசுடன் தொடர்பு கொண்டு இதற்கான அனுமதிகள் மற்றும் ஒத்துழைப்பு கோரப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார்.

பேபி அணையின் அருகே உள்ள மரங்களை அகற்றுவதற்கு அம்மாநில நீர்வளத்துறை அமைச்சருக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளதாகவும், இரண்டு முறை இரு மாநில தலைமைச் செயலாளர்களுடன் நடைபெற்ற கூட்டத்திலும் இது குறித்து விவாதிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

முல்லைப் பெரியாறு அணையில் தமிழகத்தின் உரிமையையும், விவசாயிகளின் நலனை பாதுகாக்கவும் மாநில அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுக்கும் என்று திரு துரைமுருகன் குறிப்பிட்டுள்ளார்.

[]<<<>>>[]

தமிழகத்திற்கான புதிய தேசிய நெடுஞ்சாலை திட்டங்களை நிறைவேற்றித் தருமாறு மாநில பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு ஏ வ வேலு கேட்டுக் கொண்டுள்ளார்.

புதுதில்லியில் மத்திய நெடுஞ்சாலை மற்றும் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி தலைமையில் நடைபெற்ற தேசிய நெடுஞ்சாலை பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

கிளாம்பாக்கம் முதல் செங்கல்பட்டு வரை மற்றும் மதுரவாயல் முதல் சென்னை வெளிவட்ட சாலை வரை உயர்மட்ட சாலை அமைத்துத் தருமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

கோயம்புத்தூர் புறவழிச்சாலையை ஆறுவழிப் பாதையாக மேம்படுத்தவது உள்ளிட்ட 11 முக்கிய திட்டங்களை நிறைவேற்றித் தருமாறும் அவர் கூறினார்.

தேசிய நெடுஞ்சாலைப் பணிகளின் முன்னேற்றத்திற்குத் தேவையான ஒத்துழைப்பை தமிழக அரசு அளித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நிலம் கையகப்படுத்துதல் உள்ளிட்ட செயல்பாடுகளில் தாமதம் ஏற்படுவதால் திட்டங்கள் முடிக்கப்படுவதில் சற்று காலதாமதம் ஏற்படுகிறது

என்றும், இதனை தவிர்க்கும் நோக்கில் மாநில அரசு சம்பந்தப்பட்ட துறைகளுடன் விரிவான ஆய்வுக் கூட்டங்களை நடத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனையடுத்து பல்வேறு இடர்பாடுகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

தமிழகத்தின் உள்கட்டமைப்பு திட்டங்களை மேம்படுத்துவதற்கும் மாநில அரசு முழு ஒத்துழைப்பு அளிக்கும் என்றும் திரு ஏ வ வேலு தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

தமிழக அரசு போக்குவரத்துக் கழகத்தில் வேலை வாங்கி தருவதில் முறைகேட்டில் ஈடுபட்டதாக தொடரப்பட்ட வழக்கில் மாநில அமைச்சர் திரு செந்தில்பாலாஜி-க்கு இன்று கூடுதல் குற்றப்பத்திரிகை நகல்கள் வழங்கப்பட்டன.

சென்னையில் உள்ள நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எதிரான வழக்குகளை விசாரிக்கும் தனி நீதிமன்றத்தில் நீதிபதி திரு ஜெயவேல் முன் அவர் இன்று ஆஜரானபோது இந்த குற்றப்பத்திரிகை நகல்கள் வழங்கப்பட்டன.

அரசு அதிகாரிகள், போக்குவரத்து பணியாளர்கள், இடைத்தரகர்கள் என இரண்டாயிரத்து 202 பேரின் பெயர்கள் இந்த குற்றப்பத்திரிகையில் இடம்பெற்றுள்ளன.

இந்த வழக்கு மீதான விசாரணையை நீதிபதி இம்மாதம் 24-ஆம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

**[]<<<>>>[]**

இந்திய விமானப்படையின் 92-வது ஆண்டுவிழா வரும் எட்டாம் தேதி கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி சென்னையில் வரும் ஆறாம் தேதி சிறப்பு வான் சாகச நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதற்கான ஒத்திகை நிகழ்ச்சி இன்று முதல் சென்னை மெரினா கடற்கரையிலிருந்து — கோவளம் வரை நடைபெறுகிறது.

சாகச நிகழ்ச்சியில் 72 போர் விமானங்களும், ஹெலிகாப்டர்களும் பயன்படுத்தப்பட உள்ளதாக சென்னை தாம்பரம் இந்திய விமானப்படைப்பிரிவு தலைவர் ஏர்கமோடர் ரதிஷ்குமார் தெரிவித்துள்ளார்.

விமானப்படை கொண்டாட்டம் சென்னையில் நடைபெறுவது இதுவே முதல் முறையாகும் என்று கூறிய அவர், பழங்கால போர் விமானங்கள்

உட்பட புதிய ரக போர் விமானங்கள் மற்றும் ஹெலிகாப்டர்கள் சாகச நிகழ்ச்சியில் ஈடுபடும் என்றார்.

தாம்பரம் விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களை சந்தித்த அவர், அக்டோபர் எட்டாம் தேதி விமானப்படை தினத்தையொட்டி தாம்பரத்தில் சிறப்பு அணிவகுப்பு நடைபெறும் என்று கூறினார்.

இந்த நிகழ்ச்சி தொடர்பாக பேசிய குரூப் கேப்டன் பரமன், இளைஞர்கள் விமானப்படையில் சேர்ந்து நாட்டிற்கு சேவையாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

*( சவுண்ட்பைட் - பரமன் ) -53-- செகண்ட்*

**[]<<<>>>[]**

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நடிகர் ரஜினிகாந்தின் உடல்நிலை சீராக உள்ளதாக அப்பல்லோ மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இன்னும் இரண்டு நாட்களில் அவர் நலமுடன் வீடு திரும்புவார் என்று மருத்துவமனையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே நடிகர் ரஜினிகாந்த் விரைவில் நலம்பெற வேண்டுமென இறைவனை பிரார்த்திப்பதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் திரு எல் முருகன் கூறியுள்ளார்.

நடிகர் ரஜினிகாந்த் விரைந்து நலம்பெற வேண்டுமென முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

திருநெல்வேலி மாவட்டம் கீழநத்தம் தெற்கூர் கிராமத்தில் மத்திய அரசின் மக்கள் தொடர்பாக அலுவலகம் சார்பில் தூய்மையே சேவை குறித்த விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

இம்முகாமிற்கு தலைமையேற்று பேசிய மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திரு சரவணன், ஒவ்வொருவரும் தங்களையும், தங்கள் சுற்றுப்புறத்தையும் தூய்மையாக பராமரிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

சுற்றப்புறத்தை தூய்மையாக வைத்திருப்பதன் மூலம் நோய் நொடியிலிருந்து நம்மை பாதுகாத்துக் கொள்ளலாம் என்று அவர் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தின் ஓரிரு பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்தில் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

நீலகிரி, கோவை, ஈரோடு, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர் உள்ளிட்ட வட உள்மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

*( சவுண்ட்பைட் - செ க ) -45---- செகண்ட்*

**[]<<<>>>[]**

திருப்பத்தூர் மாவட்டம் ஆலங்காயம் ஒன்றியத்தில் உள்ள நெக்னாமலை என்ற சாலை வசதி இல்லாத மலைக்கிராமத்தில் புதிய பகுதிநேர ரேஷன் கடையை ஆட்சியர் திரு தர்ப்பகராஜ் இன்று திறந்து வைத்தார்.

**[]<<<>>>[]**

தென்காசி மாவட்டத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் கிராமப்பகுதிகளுக்கு 33 வகையான விளையாட்டு உபகரங்கள் வழங்கும் பணியை ஆட்சியர் திரு கமல் கிஷோர் தொடங்கி வைத்தார்.

**[]<<<>>>[]**

கள்ளக்குறிச்சி மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மழைக்காலங்களில் மழைநீர், கழிவுநீர் தேங்காதவாறு மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆட்சியர் திரு எம் எஸ் பிரசாந்த் இன்று ஆய்வு செய்தார்.

**[]<<<>>>[]**

சென்னை மாநகராட்சி பகுதிகளில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக விளம்பர பலகைகள் மற்றும் பதாகைகளை அகற்றும் பணி நடைபெற்று வருவதாக மாநகராட்சி தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

கான்பூரில் நடைபெற்ற பங்களாதேஷ்க்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா ஏழு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

**[]<<<>>>[]**

சீனாவின் ஷாங்காய்-யில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியின் பிரதான சுற்றுக்கு இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் முன்னேறியுள்ளார்.

***END OF NEWS***